# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்
## ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG
## ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG

## பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 46 - 2023*

**கல்வி – 18.11.2023 சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45 - 11:15)**

வழமையான நேரத்தில் வழமைபோல் நடைபெறும்.

**கலைவகுப்புகள் - 18.11.2023 சனிக்கிழமை** - வழமைபோல் நடைபெறும்.

மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

**ஆண்டுக்கூட்டம் பகுதி 2 - 11.11.2023**

11.11.23 அன்று ஆண்டுக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பங்கேற்ற அனைத்து பெற்றோர் பாதுகாவலர்களுக்கும்,கூட்டறிக்கை எழுதுனருக்கும் நன்றி.

*ஆண்டுக்கூட்டத்தின் சுருக்கம். முடிவுகள்.*

ஆண்டுக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நிர்வாகத்தில் புதிதாக இணைந்து பணியாற்ற தெரிவானவர்களின் விபரம்.

திரு. சுரேஷ் முருகேசு

திரு. நந்தகுமார் ஜெயபாண்டியன்

திரு. பரணீதரன் நவரட்ணம்

திரு. துராதரன் கணேசமூர்த்தி

ஆகியோர்.

*பெற்றோர்குழு 2023 - 2024 விபரம்.*

திரு. குணேந்திரன் ஆரியதாஸன் - தலைவர்

திரு. மதனரூபன் சித்திரவேலாயுதம் - செயலாளர்

திரு. பாலாஜி செல்வராஜ்

*கணக்காய்வாளர் விபரம்.*

திரு. காந்தரூபன் லோகநாதன்

*புதிய நிர்வாகத் தெரிவுக்குழு விபரம்.*

திருமதி. பாணுசல்யா பெர்ணாண்டோ (பெற்றோர்)

திருமதி. ஜொய்சி ராஜாகுமார் (பெற்றோர்)

திருமதி. பிரகீதா ஜீவா (ஆசிரியர்)

*தேநீர்ச்சாலை நிதிக்குழு விபரம் முழுமை பெற்றபின்பு அறியத்தரப்படும்.*

நிர்வாக பொறுப்புகள் 18.11.2023 பகிரப்பட்டு நத்தார் விழா அன்று புதிய நிர்வாகம் பொறுப்புகளுடன் அறிமுகம் செய்யப்படும்.

31.12.2023 உடன் பணிக்காலம் நிறைவடைந்து தமது பொறுப்பிலிருந்து விடைபெற்றுச்செல்பவர்கள் திரு. வித்யாதரசர்மா இராதாகிருஷ்ணராஜாக்குருக்கள் மற்றும் திருமதி. சாந்தசொரூபி சாந்தநிகேதன் ஆகியோர்.

அடுத்த நிர்வாகத்தில் இணைந்து பணியாற்ற நான்குபேர் தேவை. இணைந்து பணியாற்ற விரும்புபவர்கள் தங்களைத் தயார்நிலையில் இருக்குமாறு வேண்டுகின்றோம். விண்ணப்ப முடிவுத்திகதி 31.12.2023.
பொறுப்பு மற்றும் விண்ணப்ப விபரங்கள் பின்பு அறியத்தரப்படும்.

**18.02.2023 ஆண்டுக்கூட்டத்தில் எடுத்தமுடிவுகள்.**
முழுமையான உறுப்பினர் உரிமை பெறாமல் வளாகத்தில் எந்தவொரு சந்திப்புகளிலும் (கூட்டங்களிலும்) பங்குகொள்ளமுடியாது.

10ஆம் வகுப்பில் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படமாட்டாது. வளாகத்தில் நடைபெறும் எந்த ஒரு நிகழ்வுகளிலும் பங்கேற்கமுடியாது,

முக்கியமாக விளையாட்டுப்போட்டியில் பங்கேற்கமுடியாது.

அறவிடப்பட்ட கட்டணங்களைச் செலுத்தும்வரை தற்காலிகமாக உறுப்பினர் உரிமையை நிறுத்திவைத்தல். அதாவது தற்காலிகமாக உறுப்பினர் நீக்கம் செய்தல்.

**11.11.2023 ஆண்டுக்கூட்டத்தில் எடுத்த முடிவு.**
விளையாட்டுப்போட்டி வைத்வெத்துடன் இணைந்து நடாத்துவதாகவே முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**அரையாண்டுத் தேர்வு 2023.**
09.12.2023 அன்று நடைபெறும்.

## எமது வளாக இக்கல்வியாண்டில் (2023 - 2024) நடைபெறவுள்ள நிகழ்வுகள்

நத்தார்விழா - 16.12.2023

**மழலையர் முற்றம்**

நாள் : ஞாயிற்றுக்கிழமை 03.12.2023

இடம் : Nedre Rommen 3, 0988 Olso

நேரம் : 13.00

**தேநீர்ச்சாலை -** இயங்குநிலையில் இருக்கும்.


***பெற்றோர் மற்றும் பாதுகாவலரின் முக்கிய கவனத்திற்கு!***

தாங்கள் தாங்கள் பயன்படுத்திய உணவுப்பொருட்கள் மற்றும் தேநீர்க் குவளைகள் அனைத்தையும் குப்பையிலிட்டு இடங்களைச் சுத்திகரித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ஒவ்வொரு வாரமும் வாராந்த தகவலில் அறியத்தரப்படும் தகவல்களை உள்வாங்காது செயற்படும் பெற்றோர் பாதுகாவலர்களுக்கு மீண்டும் மீண்டும் ஆதாரத்துடன் மனவருத்தத்துடனும் சுட்டிக்காட்ட விரும்புவது நீங்கள் பயன்படுத்தும் எஞ்சிய கழிவுப் பொருட்களை குப்பை கூடையில் இட்டுச் செல்லவும்.**

**இந்த நோர்வீசிய பாடசாலை நிர்வாகத்தால் தொடர்ந்து கிடைக்கும் முறைப்பாடுகளால் தமிழ்ப் பாடசாலையை நடத்தும் வாய்ப்பை இழக்க நேரிடும். அப்படி ஒரு நிலை ஏற்படுமாயின் இணையவழி கற்பித்தலை நடத்தவேண்டிய சூள்நிலைக்கு தள்ளப்படுவோம்.**

**எதிர் வரும் வாரங்களில் நாம் இதை திருத்திக் கொள்ளாவிடில் பெற்றோர் பாதுகாவலர்களை பாடசாலைக்குள் அனுமதிக்க முடியாத நிலை உருவாகும் என்பதை மனவருத்தத்துடனும் அறியத்தருகின்றோம். புரிந்துணர்வுக்கு நன்றி.**



**தைப்பொங்கல் விழா 2024 (13.01.2024)**

அன்னை பூபதி தமிழ்க் கல்விக்கூடங்கள் மற்றும் தமிழர் வள ஆலோசனை மையம் இணைந்து நடாத்தும் தைப்பொங்கல் விழா. இணைப்பைப் பார்க்கவும்!

**நிதி 2023**

**வாரம் 45 முடிந்த கல்வியாண்டு 2022 - 2023 vår 2023 இற்குரிய கட்டணவிபரணங்கள் அனுப்பப்பட்டுள்ளது. கவனத்திற்கொண்டு வழங்கப்பட்டுள்ள முடிவுத் திகதிக்குள் /விரைவாகச் செலுத்தினால் நன்று.**

**நிலுவையிலுள்ள பழைய (høst 2022) கட்டணங்களை விரைவாகச் செலுத்தவும். செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.**

முடிந்த கல்வியாண்டு 2022 - 2023 கட்டண அறவீட்டுத் தகவல் இன்னும் கிடைக்காதவர்கள் நிதிப்பொறுப்பாளருடன் தொடர்புகொள்ளவும்.

இந்த கல்வியாண்டு 2023-2024 høst 2023 கட்டண விபரம் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

அன்னையினால் தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்ட அங்கத்துவக் கட்டணத்தினை சிலர் இன்னும் செலுத்தவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. எனவே இதுவரை செலுத்தாமல் இருந்தால் அதனை விரைவில் செலுத்தும்படி வேண்டிக்கொள்கின்றோம். அக்கட்டணத்தினையும் செலுத்தியவர்கள் மட்டுமே முழுமையான உறுப்பினர் உரிமையைப் பெற்றவர்களாவர் என்பதனை அறியத்தருகின்றோம். ஐயப்பாடுகள் இருப்பின் நிதிப்பொறுப்பாளருடன் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.
jude@annai.no

**முக்கிய கவனம்!!**

1. *மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.*
2. *கற்பித்தல் நேரங்களில் கீழ்க்கட்டிடத்தினுள் எந்தப் பெற்றோரும் காத்திருப்பதற்கு ஒப்புதல் இல்லை.*
3. *பாடசாலையில் தீப்பிடித்ததற்கான அறிகுறியை அறிவிக்கும் அபாயமணி ஒலிக்கும்பட்சத்தில்* ***(brannalarm)****, அனைவரும் கட் டிடங்களிலிருந்து தாமதமெதுவுமின்றி வெளியேறவேண்டும். அனைவரும் அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி* ***(brannbil, ambulanse osv)*** *வாகனத்தரிப்பிடத்திலுள்ள கொடிக்கம்பத்தினருகே ஒன்றுகூடவேண்டும்.*
   *வகுப்பிலுள்ள மாணவர்களை வெளியே கூட்டிவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.*
   *பெற்றோர்கள் வகுப்பறை நோக்கிச் செல்வதற்கு அனுமதியில்லை.*
   *எப்பொழுதும் வாகனங்களை அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி* ***(brannbil,politibil, ambulanse osv)*** *நிற்பாட்டுதல் அவசியமென்பதை நினைவிற்கொள்க!*

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

நன்றி!

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!

நிர்வாகம்
அன்னை பூபதி லோறன்ஸ்கூக் வளாகம்